# திறவுகோல்

2052 தை | மாத இதழ்



வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு சேல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# நெப்போலியன்

(மகுடம் இழந்தால் மாவீரன் இல்லையென்று ஆகிவிடுமா?)

அன்பு நண்பன் பாலின் நான் செயண்ட் ஹெலினா தீவுக்கு வந்து 6 வருடங்கள் உருண்டோடிவிட்டது. என் நினைவுப் பறவை பிரெஞ்சு தேசத்து வானில் தான் பறந்து கொண்டிருக்கிறது. எனது கைகள் வாள் பிடிக்க ஏங்குகின்றது. கனவில் கூட எனது காதுகளில் போரின் எக்காளம் தான் ஒலிக்கிறது. எனது கனவு தேசத்தைவிட்டு பலமைல் தூரம் வந்துவிட்டேன். மக்கள் என் வரவை எதிர்நோக்கி இருப்பார்கள். பிரெஞ்சு தேசத்தை யார் ஆண்டாலும் மக்களுக்கு என்றும் நான் தானே சக்கரவர்த்தி. எனது கிழக்கில் எப்போது கதிரவன் உதிக்கும். எனது இறக்கைகள் முடமாக்கப்பட்டுவிட்டன இனி எப்படி நான் சுதந்திர வானில் சிறகடித்துப் பறக்க முடியும்.

பிரெஞ்சு தேசம் ஐரோப்பாவுக்கு தலைமை ஏற்க வேண்டும் என்கின்ற என் கனவு பலிக்குமா? நான் அங்கு இருந்திருந்தால் ஐரோப்பாவின் தலையெழுத்தையே மாற்றி எழுதி இருப்பேன். மரணம் என்னை மெல்ல மெல்ல நெருங்கி வருகிறது. பிரெஞ்சு தேசத்து மண்ணினை கொடுத்தனுப்பு என் கல்லறையில் அது தூவப்பட்டால்தான் என் ஆத்மா சாந்தியடையும். பயம் என்றால் என்னவென்று தெரியாமல் வாழ்ந்தவன் இறுதியில் மரணத்தையும் அஞ்சாமல்தான் எதிர்கொள்வேன். இங்கே புத்தகங்களே எனது அந்தரங்க நண்பன். இப்போது எனக்கு ஞானபோதை அதிகம் தேவைப்படுகிறது. எனது வியூகத்தை உடைத்து விதி என்னை தோற்கடித்து காட்டிவிட்டது.

காலச்சக்கரம் மெதுவாக நகர்வதை இங்கு நான் உணர்கிறேன். எத்தனையோ தலைகளை வெட்டி சாய்த்த இந்தக் கைகள் இங்கு குளிரில் நடுங்குகின்றன. கணப்புக்கு சுள்ளி பொறுக்கிப் போடுவதைக்கூட நான் தான் இங்கு செய்ய வேண்டியிருக்கிறது. சக்கரவர்த்தி எடுக்கும் முடிவுகள் எப்போதுமே சரியாகத்தான் இருந்திருக்க வேண்டும். ரஷ்யா மீது தாக்குதலை தொடுத்தது நான் போட்ட தப்புக்கணக்கு. பிரிட்டிஷ் அரசின் ராஜதந்திரம் மண்ணைக் கவ்வும் நேரம் வரும். பிரெஞ்சு தேசத்து மக்கள் தங்கள் இதயங்களில் எனக்கு இடமளிப்பார்கள். முடியாது என்பது என் அகராதியிலேயே இல்லை என்பது உனக்குத் தெரியும். பிரெஞ்சு மண்ணில்

ஒருவீரன் உதித்தெழுந்தால் போதும் ஐரோப்பாவையே அசைத்துப் பார்த்துவிடலாம்.

நான் இங்கு உயிருடன் இருப்பது பிரெஞ்சு தேசத்து வீரர்களுக்கு உத்வேகத்தையே கொடுக்கும். இனி நாம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும் மிக முக்கியமானது. நாள், வாரம், மாதம், வருடம் என்று காலங்கள் ஓடிக்கொண்டே இருக்கிறது. நான் இறந்தாலும் பிரெஞ்சு தேசத்து ஆன்மாவாக என்றென்றும் இருந்து கொண்டிருப்பேன். என்னை இந்தத் தீவில் புதைத்துவிடலாம், ஆனால் பிரெஞ்சு தேசத்தில் ஆயிரம் நெப்போலியன்களை விதைத்துவிட்டுத்தான் நான் சாவேன். நாட்டுக்காக நான் சாகிறேன். எனது தியாகம் பிரெஞ்சு தேசத்து மக்களை உசுப்பி பிரிட்டிஷ் ராஜ்யத்துக்கு எதிராக அவர்களை திரளவைக்கும்.

அதிகாரம் என்பது போதை தரும் ஒன்று. அது நம்மை தவறிழைக்கத்தான் தூண்டும். என்ன அரசாங்கம் இது, நெப்போலியனை சவப்பெட்டியில் அடைத்துவிட்டால் எல்லாம் முடிந்ததா? எந்த விதை விருட்சமாகும் என்று அந்தக் கடவுளுக்கு மட்டுமே தெரியும். பிரெஞ்சு தேசத்து தாய்மார்கள் போராளிகளை ஈன்றெடுக்க வேண்டிய தருணமிது. தியாகம் ஒன்றினால் தான் நம் தலைவிதியை மாற்ற முடியும். எனக்கு செவிகொடு நான் உனக்கு விடுதலையைப் பற்றிய மகத்துவத்தை சொல்கிறேன். பாலின் நீ எனது கனவுகளுக்கு உயிர் கொடுக்க வேண்டும். எனது அம்பாக நீ இருக்க வேண்டும். பாலின் இஸ் மை பென். உயிர்த்துடிப்புள்ள ராஜ்யத்தில் தான் என்னைப் போன்ற வீரர்கள் பிறப்பார்கள். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அடிமைகளைத் தேடும் ஆட்டம் அடங்கட்டும்.

பிரெஞ்சு மண்ணின் மீது கால்வைக்காமல் நான் இங்கேயே மரிக்கலாம். இந்தக் கடலிலிருந்து எழும் பேரலையாக பன்னெடுங்காலமாக நான் இருந்து வருவேன். அந்திம காலத்தில் இருக்கும் எனக்கு உலகம் வேறுமாதிரி தென்படுகிறது. மரணத்திற்கு பிறகுதான் வாழ்க்கையே தொடங்குகின்றது என்று நான் நினைக்கிறேன். ஐம்பத்துஇரண்டு வருடங்கள் நீர்க்குமிழி தோன்றி மறைவதைப் போல விரைவாகச் சென்றுவிட்டது. மரணம் எனக்கு முற்றுப்புள்ளி வைத்தால்தான் எனது வாழ்வு அர்த்தம் பெறத் துவங்கும்.

இறைச்சட்டம் என்னைச் சாட்சிக் கூண்டில் ஏற்றி விசாரிக்குமா எனத் தெரியாது. அவர்கள் சுமத்தும் குற்றச்சாட்டுக்கு எனது பதில் என்னவாக

இருக்கும் என்று நான் இப்போது சிந்தித்துக் கொண்டு இருக்கிறேன். எனது ஆயுளின் பாதியை போர்க்களத்திலும் மீதியை இந்தத் தீவிலும் இழந்துவிட்டேன். வென்றாலும், வீழ்ந்தாலும் நான் என்றுமே சக்கரவர்த்தி தான். நாட்டின் நிலப்பகுதிகளை வேட்டையாடித் திரிந்த எனக்கு தன்னுள்ளே பார்க்கும் வரத்தை இந்தத்தீவுதான் அளித்தது. போர்க்களத்தில் என்னை சேனைகள் சூழ்ந்திருப்பதைப் போல இந்தத் தீவைச் சுற்றி கடல் சூழ்ந்திருக்கிறது.

இரவுப் பொழுதில் நிலவும் நட்சத்திரங்களும் எனக்கு கதை சொல்லி உறங்க வைக்கின்றன. இந்தப் பிரபஞ்சத்தில் பூமியே சிறுதூசு என்றால் மனிதர்களெல்லாம் கொசுக்கள் தான். கடவுள் எனது கடைசி ஆசை என்னவென்று கேட்டால், பிரெஞ்சு தேசத்தில் ஒரு நாளாவது வாழ்ந்துவிட்டு வருகிறேன் என்பேன். இந்தக் கடிதத்தில் நான் மனம் திறந்திருக்கிறேன். நேற்று வானில் தென்பட்ட தூமகேதுவுக்கும் எனது மரணத்துக்கும் சம்மந்தம் இருக்கலாம். செயண்ட் ஹெலினா தீவில் எனது உடல் அடக்கம் செய்யப்பட்டாலும் எனது ஆன்மா பிரெஞ்சு தேசத்தையே சுற்றிக் கொண்டிருக்கும்.

இப்படிக்கு

நாட்களை எண்ணிக் கொண்டிக்கும
உனது நண்பன் நெப்போலியன் போனபார்ட்



ப.மதியழகன்
*115, வள்ளலார் சாலை,*
*ஆர்.பி.சிவம் நகர்,*
*மன்னார்குடி - 614001.*
*திருவாரூர் மாவட்டம்.*
*கைப்பேசி: 9597332952*
*பகிரி: 9384251845*

## நிலவின் வேர்கள்

கண்களைத் தொடுகிறது
பாலையின் கனல்
காலடி நிழலைத் தொடர்கிறது
காலப் பெருவெளியில்
கடவுளின் பெருங்கருணையை
தேடுகிறேன்
கடவுளின் வேர்கள்
இதயமா?
இந்த உடல் படகு
கரை சேராமலே சிதைந்து
விடுகிறது
எங்கே இருக்கிறது உன் கரை
உன் வீடு எப்படி இருக்கும்
என் வீட்டிலிருந்து முயல்கிறேன்
உன்னோடு சங்கமிக்க வெகு
தூரப்பயணமாக

எனக்கு அமுதமோ
உன் போதனைகளோ
தேவையில்லை
ஒரு முறை இரு கண்களிடம்
நிரப்பிவிடு
என் மூச்சுக்காற்றால் உன்
வேர்களைத்தொடுகிறேன்
பிரபஞ்சத்தின் எந்த கரையில்
இருக்கிறாய்
என் மனதை அனுப்புகிறேன்
உடல் படகை என்ன செய்கிறாய்
இதோ கண்ணெதிரே
கரைந்து போகிறது பூமியில் சுற்றி
வந்த உடல் படகுகள்
இதில் நீ எங்கு கரைந்திருக்கிறாய்
ஏன் மனிதனைத் தேடுகிறாய்
நீதான் மனிதர்களின் வேர்களா?

## காலக் களிம்பாய்

கல் சமைந்து
மலர் சூடிக்கொண்டது
விக்ரஹம்

அவதாரத்தில் ஆயிரம்
கதைகளுக்கு மத்தியில்
நன்மை செய்வதாய்
அம்ச முகங்கள்
அரை நிர்வாணங்கள்

கால வெளியில்
பகலிலும் இருளிலும்
நீர் இசை
காற்று இசையை
பருகி நகர்கிறது விக்ரஹம்

கடவுள் கருவறையில்
பிறக்க முயல்கிறார்

மனிதனுக்கு
இந்த பால்வெளியில்
எதுவும் விளங்கவில்லை
சக மனிதன் புலம்பிக்கொண்டிருக்கிறான்
அருள் பாலிக்கும்
ஒரு மனிதனின் வரவைத்தேடி

காலக் களிம்பாய்
மனிதன் சமைந்து
மனிதனைச் சூடிக்கொள்வது
மனிதப் பிரதியின் சாயை

அந்த சாயைப் பார்த்துச்
சிரிக்கிறது விக்ரஹம்.

— ப.தனஞ்ஜெயன்

## மழலை:

உன்னை போல
உலகின் புது மொழி யாதுமில்லை
என் கண்ணே!
கனவுகள் இல்லையென
நினைக்கையில்
நீ என்னை நித்தம் நினைக்க செய்யும்
கனவாகி போகிறாய்

## அவனோடு:

பேசி முடித்த இரவுகள்
பேசாது தவித்த பகல்கள் என
மாற்றம் வந்துமே
மாறாதது மனம் மட்டுமே
அன்பின் நிறைவில்
வாழ்வின் புது உறவில்

## நிலா:

வேடிக்கை பார்க்க
அவள் ஒரு வெள்ளி தாரகை
தொலைதூரம் வசிக்கிறாள்
நான் தரை கடந்து அவள்
முகம் தொட ஏவுகணை ஏந்துகிறேன் !
நித்தம் என் கனவினிலே

- கனிமொழி சீனிவாசன்



த. சீனுதரண்,
இரண்டாம் வகுப்பு,
வடுவூர் வடபாதி.

# சுழல் விழி

ஒத்தையில மெத்தையில
ஒன்நெனப்பு சுத்தையில
பத்திக்கினன் செத்தையென
பாழடைச்சன் நித்திரைய

அத்தமக நெனைக்கில
அக்கம்பக்கம் இனிக்கல
பித்தமாகி அலையுறன்
பிசினாகி கொழையுறன்

வத்திக்குச்சி இடுப்புல
வஞ்சிரமீன் மிடுக்கில
சொக்கிநானும் தவிக்கிறன்
சொர்க்கத்துல மெதக்கிறன்

வெள்ளரிக்கா மினுக்கில
வெட்டிவேரு மணத்துல
சிக்கிக்கினு சொழலுறன்
சிறகடிச்சு ஒழலுறன்

குத்தவச்ச கொழுப்புல
கொன்னுத்தின்னும் சிரிப்புல
பொத்துகினன் மேகமாம்
பொங்கிவரும் தாகந்தான்

ஓரவிழி உரசலில்
ஒழுகுந்தேன் கொஞ்சலில்
பேரலையா நுழையுற
பேரழகில் தழுவுற

கூவுங்குயில் கசக்குது
குளிர்காத்து எரிக்குது
முத்தத்தில யுத்தமிடு
முழுநேரம் கட்டியிரு

சத்தமின்றி உள்ளவந்த
சர்க்கரைய அள்ளித்தந்த
சித்தமெல்லாம் தித்தித்திட
சீக்கிரமே சேருமடி

அந்தரத்து மேகமா
ஆத்துவெள்ள ஓட்டமா
தெசையின்றி திரிஞ்சவன்
தேங்கிநின்னன் உன்னெதிர

ஊருசெனம் மதிக்குது
ஓசத்தியா புகழுது
ஒன்னக்கண்ட நாள்முதலா
ஒழுக்கங்கள் கூடுது

வெத்துவேட்டு பேரமாத்தி
வெறும்பய ஆளத்தேத்தி
பொறுப்பாக்கி வச்சவளே
பொண்டாட்டியா வாரதெப்போ?

# முழுசா சோக்கிப்போற

கொடம்நெறைய தண்ணிப்புடிச்சி
குனிஞ்சி தூக்கும்போது
கயாமுயா ஆவுதடி
காஞ்ச மனசுக்காடு
மூஞ்சக்காட்டி முழியக்காட்டி
முழுசா சொக்கிப்போற
ஆஞ்சமீனா நீந்துறனே
ஆசக்கொழம்பில் நானே....

கரிசக்காட்டுப் பருத்திப்பூவா
கள்ளம்வச்சி சிரிக்கிற
கட்டிவெல்லப் பாவுபோல
கண்டபடி இனிக்கிற
மெலிஞ்சயிடுப்பில் பாரந்தூக்கி
மெரலவச்சி மயக்குற
திமிருபேச்சால் சமஞ்சவீச்சால்
திருடித்தின்னு செரிக்கிற....

லட்டுக்கன்னம் மொட்டுதேகம்
லபக்குன்னு முழுங்குதே

கமருகட்டும் கானாபாட்டும்
கன்னிசோக்கில் கசக்குதே
நெத்திலிய சுட்டுவச்ச
நெனப்புவுள்ள மணக்குதே
அத்தமவ மாமன்மவ
யாருன்னாலும் வெறுக்குதே....

நேரத்துக்குத் தின்னாம
நேசத்துல கெறங்குறன்
மண்டக்கனம் அத்துப்போயி
மைனாப்பின்னா அலையுறன்
இரட்டைசட இராங்குநட
இராட்டினமா சொழட்டுதே
வெட்டருவா பார்வவொன்னு
வேங்கையாட்டம் கிழிக்குதே....

விட்டுவிட்டுத் துடிக்கும்நெஞ்சி
விடாமலே நெனைக்குதே
கிட்டவரும் போதெல்லாம்
கிறுகிறுன்னு கவுக்குதே
வெடலப்புள்ள வாசத்தால
வேர்வரைக்கும் மணக்குற
முத்திரையா முத்தம்வச்சி
முதுகுத்தண்ட நடுக்குற...

எத்தனையோ பொண்ணக்கண்டும்
எதுவும் உள்ளத்தோனல
ஒன்னப்பாத்த நாள்முதலா
ஒட்டிக்கின உசுருல
இதயம்புடிச்ச காதல்வந்து
மினியநெறிச்சி இருக்குதே
சந்தோசமா இருக்குயிதுவும்
சாவுவற தொடறவே!

## வசந்தத்தின் உயிர்த்தல்

நீயற்றப் பொழுதின்
சாம்பல் நிலத்தில்
கனன்று புகைகிறது
வேர்வரைப் பொசுங்கிய
உயிரின் மிச்சம்
வாழ்தலை மீண்டும் துவக்க
உன் வருகையின் கருணை
புதிய விதைத்தூவலாம்
மழைத்தூறலாம்
மலர்ப்பூக்கலாம்
வசந்தத்தின் உயிர்த்தலை
நிஜம் செய்ய
எதிர்பார்ப்பின் கரங்களில்
மயிலிறகாகுமா
நேர்கொண்ட
நின் வெட்கவருடல் ஒன்று?

காரிருளின் நெடுங்கனவில்
பெரும்பசியின் நாவினால்
மலைப்பாம்பெனச் சுருட்டி
மாமிசம் விழுங்கினாய்
படபடத்த எனை
தசைகள் இறுகி
எலும்புகள் நொறுங்கி
குருதி வடிந்து
சக்கையாய் துப்பி
வழக்கமாய் புலர்ந்தது
எக்கவலையுமின்றி
செந்நிற ஆடையில்
வெப்பச் சூரியன்!

## சாதலின் சிலதுளிகள்

அம்மன்கோவில் பின்புறமுள்ள
புங்கையின் கீழ்நின்று
உனக்காகக் காத்திருக்கிறேன்
இலைகளும் பூக்களும்
சருகுகளாய் உதிர்கின்றன
வீதியின் தொலைதூரத்தை

வெகுநேரமாய் உற்றுநோக்கும்
வெளிறிய விழிகளில்
கண்ணீரோடு கசிகிறது
சாதலின் சிலதுளிகள்!

வனத்தின் பூத்தமுகத்தால்
சாய்ந்து நோக்கி
தெள்ளியயென் நதியின்மேல் வீழ்கிறது
பொன்மிளிரும் உன் வெட்கங்கள்
வண்ணங்களால் நுரைத்து
தலைசுழன்று விரைகிறேன்
கழிமுகத்தின் வாயிலில்
உதடுகள் குவித்துப்
பேரலைகளால் மோத
நிச்சயம் காத்திருப்பாய்தானே நீ ?

நீயற்ற வீதியில்
தண்ணீர் பிடிக்க வருகிறேன்
கண்ணீரால் நிறைகிறது
ஊதாநிற நெகிழிக்குடம் !

ஆடுமேய்க்க வருவதாய்
நீ குறித்த இடத்தில் தழைத்திருந்தோம்
புல்வெளியும் நானும்
வழிப்போக்கரின் கால்நடைகளால்
நுனிப்புல் மேய்ந்திடும் நான்
வேர்களில் அமிலம் பாய்ந்து
இரணமுடன் தீய்கிறேன்
நீலவானத்தைக் காரிருளால் மூடி
நட்சத்திரங்கள் அழும்
முன்னிரவின் காலம்வரை
அப்பக்கம் தரிசனம் தராமல்
நீவளர்த்த ஆடு
மாமிசம் ஆகியிருக்கலாமோ?




- பொன். தெய்வா
ஐவேலி

தனலட்சுமி,

மன்னார்குடி.








க.அன்பு,
வடுவூர்.

# அத்தை மகன் மேல் காதல் கொண்ட பெண்

நித்தம் நித்தம் ஆச
உன்பக்கம் வந்து பேச
என் உசுரெல்லாம்
வெக்கப்பட்டு கூச...

காதல் வந்த நாளா
அன்னம் தண்ணி தேடல
அத்தான் ஒன்ன நெனச்சு
நித்திர வந்து கூடல...

உன் அழகை அள்ளி
உசுருல தோட்டம் போட்டேன்
நீதான் வேனுமுன்னு
கோவிலுக்கு காசமுடுஞ்சு
கேட்டேன்.

நீ இல்லாமல் ஒருகனம்
உசுரு ஒடம்புல தங்காது
கட்டையில போனாலும்
ஒன்னநெனச்சு
மனசு வேகாது.

# மழை.. !

இலைகளை நனைத்து சொட்டுகிற
கன மழையில் நனைந்து ....
அமைதியாகிறது இரவின் ஓசை....!

கரும் மேகத்தில் மறைந்த....
கவலையின் ரணங்களை
தன் வெளிச்ச கீறலால்...
காட்டிவிட்டு செல்கிறது மின்னல்....!?

வானத்தில் இருந்து பூமியில்
வட்ட முகம் பார்க்கும்...
பால் நிலவின் ஆசையை....
கலங்க வைக்கிறது....
தேங்கிய நீரில் விழுந்த தூறல்......!?

இடியின் இரவு ஓசை...
தாழ்வாரத்தில் கட்டியிருக்கும்..
அசை போடும் வெள்ளாடுகளை
பயமுறுத்தி செல்கிறது......!

பெருத்த பேய் மழையில்....
கூடிழந்து கூடிக் கத்துகிற
பறவைகளின் இரைச்சலில் ...
நடு சாம தூக்கம் கலைந்துபோக.....!

மீதி இரவில் நினைவை நனைக்கிறது
எதிர்கால அச்சங்கள்............!!?



முனைவர்.
சா.சம்பத்
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.



மோனிக்கா திருநாவுகரசு,
முதுகலை கணிதம்,
புள்ளவராயன் குடிக்காடு

# சுமைகள்

இதுவென அறுதியிட்டுச்
சொல்லாமல் அழகாய்க் கடக்கிறது
வாழ்க்கையின் நொடிகளனைத்தும்.

சில நொடிகளனைத்தும்
எதிர்பார்ப்புகளில் !

பல நொடிகளனைத்தும்
நீரோடை போல தெளிந்து நகரும் !

பலமுறை முட்டாளாகவும்,
சிலமுறை அறிவாளியாகவும்,
சித்தரிக்கப் பட்டிருக்கலாம்.

எனக்கென ரசிக்கப்பட்ட மலர்களை
சிலர் வெடுக்கென பிடுங்கி
முட்களுக்கு வாழ்த்துவதும்
ஏற்பட்டிருக்கலாம்.

என் உறங்காத கனவுகளை
தூக்கத்திலிருந்து தட்டி
எழுப்பும் அளவிற்கு சிலர்
சென்றிருக்கலாம்.

என் விழிவிரியும் விரக்தியொன்றை
பக்குவமாய் விதைத்துச்
சென்றிருக்கலாம்.

கண்ணாடியிடம் என்னை
இனங்கான விண்ணப்பம்
போட்டிருக்கலாம்.

எதுவேண்டுமானாலும்
நிரப்பிக் கொள்ளும் அளவிற்கு
மிகப்பெரிய சுமைதாங்கும்

பைகளை நான்
பத்திரப்படுத்தி வைத்துள்ளேன்.

எதுவும் தாங்கிக் கொள்ளும்
சுமைகளொன்றும் வாழ்வின்
வெறுப்புகளல்லவே !!!

- கவிமலர் த.சரண்யா
கொழிஞ்சாம்பாறை,
பாலக்காடு மாவட்டம்,
கேரளம்.



# நிலா

சிறுவன் விட்டெறிந்த கல்
நிலவைக் கிழித்துச் சென்றது
குளத்தில்.

நிலா சாம்ராஜ்யம் நடத்தும்
இரவுக் கோட்டைக்குள் நுழையவே
முடியாது கதிரவன்.

உன்னைப் பார்த்துக் கொண்டே
வந்ததில் தவறி குளத்தில்
விழுந்தது நிலா.

சூரியனைத் தேடி நிலவும்
நிலவைத் தேடி சூரியனும்
சுற்றிக் கொண்டே இருக்கிறது.

அமாவாசையன்று
அரசு விடுமுறை
நிலவுக்கு.

சாக்கடையே ஆனாலும்
பொட்டு வைக்கத் தவறியதில்லை
நிலா.

சுத்தமாகத் தான் இருந்தது
சாக்கடையில் விழுந்த
நிலா.

- **ஆனந்தன்,**
திருப்பூர்.




**S. திவ்யதர்சினி,**
9ஆம் வகுப்பு,
தஞ்சாவூர்



மூங்கில்
பெயர் மாற்றம் செய்து
கொண்டது
புல்லாங்குழலென்று.

- **ஆனந்தன்,**
திருப்பூர்

# கவியாசகன் ஹைக்கூ கவிதைகள்

1)
அருகில் இருந்தும்
இனங்காண முடியவில்லை
பகல் மின்மினியை

2)
இரட்டை பழத்தை
பிரித்துண்ண மறுக்கிறாள்
விவாகரத்தானவள்

3)
வரைந்த ஓவியம்
தெளிவின்றித் தெரிகிறது
முன்பனிக்கால காட்சி

4)
நல்லடக்கத்தின் பின்
கல்லறையில் விழுகிறது
உதிர்ந்த இறகு

5)
நல்லடக்கம் வரை
வானில் வட்டமிடுகிறது
வெண்தலைக் கழுகு

6)
நிலாக்கால இரவு
வறண்ட நிலத்தில் விழும்
பட்டமரத்தின் நிழல்

7)
காய்க்காத மரத்தில்
ஊரார் முன் தொங்குகிறது
முதிர்கன்னியின் சடலம்

8)
தொலைந்த ஆட்டை
அடையாளம் காட்டுகிறது
வீசும் துர்நாற்றம்

9)
கார்மேகம் சூழ்ந்ததும்
அசைவிழந்து போகின்றன
சூரியகாந்தி பூக்கள்

10)
இலையுதிர் காலம்
தினமும் குறைந்து வரும்
சாலையின் நிழல்



எ.ஜே. ரொஷான் ராஜ்குமார்,
...கவியாசகன்...!!!
ஈழம்
+94777856106
stanlyroshan26@gmail.com

# பெண்மை !!

விடை தெரியாத விதியின்!!
விளையாட்டு மைதானத்தில்!!
வீராங்கனையாய் வாழ!!
வந்தவள் தான் பெண்!!

பூக்கள்!!
புன்னகையின் வெளிச்சம்!!
பெண் அவளின்
பொக்கிஷம்!!
உணர்வுகளின் உந்து
பொருள்!!
செடிகளின் அரசி!!
வெக்கத்தின் ரகசியம்!!
வேதனையின் வேக்கை!!
காதல் தேன்!!
தெய்வங்களின் தேடல்
பொருள்!!

என் கல்வனே!!
நான் தொலைத்த
இதயத்திற்கு
பதிலாய் தருகிறாய்!!
உன் காதலை!!
மறுக்காமல் ஏற்பேன்!!
உன்னையும் சேர்ந்து!!

கவிஞன்!!
நீரை எடுப்பதற்கு மட்டும்
தான்!!!
வாளி உதவும் என்று
அன்று எண்ணினேன்!!
கிணறே இல்லாமல்
அமுதங்களை
சுரக்கும்
இந்த வாளி கவிஞனை
மறந்து!!!

பா.எழிலரசி
பாலசுப்பிரமணியம் சாந்தி,
மூன்றாம் ஆண்டு,
புவியியல் துறை,
அ.வீரையா வாண்டையார் நினைவு
திரு புட்பம் கல்லூரி,
மன்னார்குடி.



# எச்சில் வீடு

சபித்துத் துப்பும்
மனித எச்சில்களுக்கு மத்தியில்
புனிதமாகிறது
ஓர் எச்சில்!
வீடாக!

கலைக்கும் ஒட்டடைக்குச்சிக்கும்
நிர்வாணத்தை மறைக்க
ஆடையாக சூழ்கிறது
சிலந்தி வலை!

வாயிலேயே
கயிறு திரிக்கும் சிலந்தியே!
உண்மையானவன் நீ!
அரசியல்வாதியைப் போலல்ல!

ஒளியுமில்லை
நீருமில்லை
அவ்வளவு காற்றுமில்லை
ஆனால் பாழடைந்த வீட்டில்
ஆங்காங்கே பூத்துக் கிடக்கிறாய்!
சிலந்தி வலைப் பூவே!

வீடு மேயும்
பொறியாளனே!
நீ சிறந்த கணித மேதை!
பொதுமைய வட்டங்களும்
ஆரங்களும்
பலகோண வடிவங்களும்
கொட்டுகின்றன
உன் வாயிலிருந்து!

கோடால்
கோட்டைக் கட்டுபவனே!
உன் கோட்டைக்கு
நீயே ராஜா!
நீயே மந்திரி!

நீ
போட்ட பாதையில்
தினமும் மேற்கொள்கிறாய்
நடைப்பயிற்சி!

வாஸ்து பார்த்துக்
கட்டிய வீட்டில்
வாஸ்துப் பார்க்காமல்
எழும்பும் உன் வீடு!
மூட நம்பிக்கைகளை இடித்து
நம்பிக்கைகளைத் தானே
கட்டுகிறது

சத்தமிட்டு
கெடுதல் செய்யும்
மனித வாய்களுக்கு மத்தியில்
மௌனப் புரட்சி செய்கிறது
உன் வாய்!

உழைத்து உழைத்து
வியர்வையில் நனைந்தாயோ?
உன்னையே
காயப் போட்டுக் கொள்கிறாய்
கட்டிய கொடியில்!

உன் வீட்டை
இடித்து கீழே தள்ளினாலும்
அயராது
மீண்டும் கட்டுகிறாய்
எதிர் புறத்தில்!

முதலில்
மேம்பாலம் கட்டியவன் நீதான்!

இரு சுவர்களுக்கிடையில்
செல்கிறது
இழைச் சாலை!

கெடுக்க
வலைவிரிக்கும் சமூகத்தில்
வலை விரிக்கிறாய் நீ
வாழ!

தோரணம் கட்டும்
உழைப்பாளியே!
உன் உழைப்பை சுரண்டினாலும்
உயரத்திலேயே வாழ்கிறாய்
மனிதத் தலைகளின்மேல்!

**சா.கா.பாரதி ராஜா,**
செங்கல்பட்டு.
*9944315732*



---





இனிமையான காலை பொழுதில்
பொழியும் பனியில் பொங்கல் வைத்து
சுட்டேரிக்கும் சூரிய பகவானுக்கு
படையல் வைத்து
சுதந்திரமாக சுற்றி திரியும்
பறவைகளுக்கு சாதம் வைத்து
சுற்றுப்புற சொந்தங்களும்
உற்றார் உறவினர்களும்
இப்பொங்கலை
இனிமையாகவும்
இனிப்பாகவும் கொண்டாட என்
இதயம் கனிந்த
பொன்னான பொங்கல்
நல்வாழ்த்துகள்...

**சிவா,**
வடுவூர் வடபாதி

# இது சுற்றுச்சூழலுக்கான பள்ளி




**அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பெருந்துறை**

இது ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி. இது நூறு வருடங்களாக சிறந்த முறையில் இயங்கிவருகிறது. இப்போது, இப்பள்ளியில் திரு.ஆ.அருள் குமார் தலைமை ஆசிரியராக பணிபுரிகிறார். இப்பள்ளியின் வேளாண்துறை ஆசிரியர் திரு.சி.கந்தன் தன் மாணவர்களுடன் இணைந்து பத்து வருடங்களுக்கு மேல் பல்வேறு சுற்றுச்சூழல் காக்கும் நெறிமுறைகளை பள்ளி வளாகத்தில் நடத்திவருகிறார்.

இப்பள்ளியில் “வேளாண்மை” செயல்வழிக் கற்றல் முறையினால் கற்பிக்கப்படுகிறது. இப்பள்ளி பசுமை புரட்சிக்காக "தி இந்தியன் எக்ஸ்பிரஸ்" முதலிய ஆங்கிலப் பத்திரிகைகளில் அவ்வப்போது பாராட்டப்படுகிறது. மற்ற அரசு பள்ளிகளில் வேளாண்துறை இல்லாமல் இருப்பது சற்று வருத்தமளிக்கிறது.

**திரு.சி.கந்தன் மற்றும் அவரின் மாணவர்கள்**



இப்பள்ளியில் விதைத்து வளர்க்கப்பட்ட காய்கறிகளைத் தான் இப்பள்ளியின் சத்துணவுக்கு பயன்படுத்துகிறார்கள். பள்ளியில் ஆக்சிஜன் அளவு அதிகமாக இருப்பதால் வெப்பம் குறைந்து, பள்ளி முழுவதும் குளிர்ந்த நிலையில் இருக்கிறது. இது மாணவர்களின் வருகையை அதிகரித்து “நூறு விழுக்காடு தேர்ச்சி”க்கு காரணமாக இருக்கிறது. இப்பள்ளியில் படித்த முன்னாள் மாணவர் திரு.துரைசாமி ஐயா, தன் “சக்திதேவி

அறக்கட்டளை”யின் வாயிலாக இப்பள்ளியின் வளர்ச்சிக்கு தொடர்ந்து உதவி வருகிறார்.

## பள்ளி வளாகம்



கீழ் குறிப்பிட்டுள்ள வேளாண் முறைகள் இப்பள்ளியில் பயன்படுத்தப்படுகின்றன:

1. மியாவாக்கி முறை - ஜப்பானிய தாவரவியல் நிபுணர் உயர்திரு.அக்கிரா மியாவாக்கி(வயது: 93) ஐயா கண்டுபிடித்த இம்முறையினால் செடிகள் 30 மடங்கு அடர்த்தியாகவும் மற்றும் 10 மடங்கு வேகமாகவும் வளர்கின்றன.

2. உயிர்வளிச் சோலை - ஆங்கிலத்தில் ஆக்சிஜன் பார்க் எனப்படும் இம்முறையினால் காற்றில் கார்பன் டை ஆக்சைடு அளவு குறைக்கப்பட்டு, ஆக்சிஜன் அளவு அதிகரிக்கிறது.

3. மூலிகைப் பண்ணை - தெய்வத்திரு. முனைவர்.அப்துல் கலாம் ஐயாவின் அறிவுறுத்தலின் படி இப்பள்ளியில் மூலிகைப் பண்ணை அமைக்கப்பட்டு நன்கு பராமரிக்கப்படுகிறது.



பள்ளியில் புத்தர் வாழ்கிறார் - இயற்கைவழி கற்றல்



வேளாண்துறை நுழைவு







அழகிய பூஞ்சோலை



உயிர்வளிச் சோலை






80 வயதுடைய ஆலமரம்



இப்படிக்கு,
வெ.ஹேமந்த் குமார்,
ஈரோடு.

# ஏமாற்றம்

எழுதாத காகிதமும்
கவிதை கூறும்
சில நேரங்களில்
காலத்தின் சக்கரம் சுழன்றும்
வாழ்க்கை ஏனோ நிற்கிறது
ஒற்றை புள்ளியில்.
வசந்த காலமும் மாறி வரும்
வாடைக்காற்றும் ஓய்ந்து விடும்
வாழ்க்கை வட்டம் என்பது(உ)ம்
உண்மை தானோ
எங்கு சுற்றியும் துவங்கிய
இடத்தில் நிற்கின்றதே
வாழ்க்கை ஏனோ
மாறவில்லை...
மாற்றங்கள் இல்லா
மனித வாழ்கை கூட
ஜனனம் இல்லா மரணம் தான்...

----

# நினைவலைகள்

இரவெல்லாம் இரவல் வாங்கி
ஏங்கி தவிக்கும் நாள் தானே
நித்திரையும் நித்தம் நித்தம்
ஏமாற்றி தான் போகிறதே
நீங்காத துயரமெல்லாம்
நினைவலையாய் வாட்டுகிறதே
வெளிர் முகம் புதைத்து
வெண்ணிலவும்
முகம் காட்ட மறுக்கிறதே
மண்ணில் விழாஆ மழைத்துளியாய்
வாசமில்லா மல்லிகையாய்
மன்றாடும் என் மனம்
என்று சேரும் நம் மனம்.?

# விடியாத இரவுகள்

விடியாத ஓர் இரவில்
துயிலாத கனவில் நான்
தாய்மையும் கொள்ளாதா
பாவி என்றென்றைக்கும்
பழிச்சொல் வந்துரைக்கும்
பாதகம் தான் செய்தேனோ..
தீட்டாத சித்திரமாய்
சிந்தையில் மடிந்தேனோ
மான்கொண்ட விழிகூட
மரணித்து போகிறதே
வண்ணமயில்
தோகையின்றி
ஆட நான் கண்டேன்
திங்கள் கண்டு அமர்தே நான்
அர்ப்பதரென்று அவதாரம்
கொண்டேனோ
தென்றல் வந்து தீண்டாத
சிலையாகி வாழ்வேனோ..

வடுவூர். **ஜெ. நீதிவளவன்**



# கடன் வாங்கி — கடல் தாண்டி...

அடிவயிற்றில் சுமந்தவளை
அம்போன்னு விட்டுட்டு...

அம்பானி சுமந்தவரை
அப்படியே விட்டுட்டு...

அரைகுறை மனதோடு
உறவுகளை பிரிந்து...

முன்னேற நினைத்து,
விண்மீது பறக்கிறேன்...

பணம் பணமென்றே
பாதி வயசு குறையுது...

பகலையும்,
இரவையும்,
பார்த்து பார்த்து,
நாட்கள் முடியுது...

வரவையும்,
செலவையும்,
பார்த்து பார்த்து,
வாழ்க்கை முடியுது...

தாலிவரம் வேண்டி
தாவணியில் அக்கா...

காணி நிலம் வேண்டி
கவலையில் அப்பா...

பெத்தமகன்
பத்திரமா இருக்க,
நெய் விளக்கேற்றி
கோவிலில் அம்மா...

பாடையில போகுமுன்
பேரனை பாக்கனுன்னு,
படபடப்பில் பாட்டி...

அவரவர் கனவுகளை
அவசரமாய் நிறைவேற்ற...

உறக்கமில்லா இரவுகளில்
மறத்துபோன விழிகளோடு...

தலையனை நனைத்தபடி
தவிக்கிறேன் நான்.

**கா. கமலக்கண்ணன்,**
வடுவூர் வடபாதி

# தஞ்சை பெரியக்கோவில்

சோழர் குலத்தைச் சார்ந்த
இராஜராஜ சோழ மன்னனால்
தோன்றிய தொன்மையான
புகழிடம்.
காலத்தால் பழமையானது.
இருநூற்று பதினாறடி உயரத்தில்
எழுந்து சோழர் குலத்தின்
நாகரீகம் ,பண்பாடு, வீரமென
அனைத்தையும்
"பிறர்வாய் புகழ்பேச மௌனமாய்
ஆழ்ந்து நிற்பது".

பல சிற்பிகளையும் கட்டிட
கலைஞர்களையும்
பண்டாரிகளையும்
பல வேலையாட்களையும்
கொண்டு
உருவாக்கினார் சோழ மன்னன்.

மன்னனின் மனதோ மிக
விசாலமானது, என்பதறிய
அழகான தொலைநோக்கு
பார்வையுடன் உற்று நோக்கலுடன்
இன்றும் பேசும் புகழ் காவியமாக
பொக்கிஷமாக திகழும் இந்த
ஆலயமே சான்று.

உறுதுணையாக இருந்த
அனைவரது
பெயரையும் கல்வெட்டுகளாக
அழியா வண்ணம் அரங்கேற்றி
மனதாலும் உயர்ந்து
வாழ்ந்துள்ளார்
சோழ மன்னர்.

தஞ்சை விவசாயத்தை
முதுகெலும்பாகவும்,
பெருவுடையார் கோவிலை
உயிர்தளமாகவும், தலையாட்டி
பொம்மையை சின்னமாகவும்
கொண்டு சிறப்பின்
உச்சத்தில் உள்ளது,
"பேரிடராம் பெரு வெள்ளமாம்"
அசையாது பெயர் சொல்லி
சோழனின் பெருமை பேசுகிறது
இந்த முற்று பெறாத காவியம்.
ஆங்கிலேயனும் 'ஆ' என்னும்படி
ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது,
சோழனின் இந்த ஓவியம்.

பாண்டியர்களும், நாயக்கர்களும்,
மராட்டியர்களும் போர் செய்து
வாழ்ந்து மாய்ந்தமிடமிது.
இப்படி இக்கால
பொறியாளர்களும்
வல்லுனர்களும் காலம்கடந்தும்
கற்று தேர நினைக்கும்
'கலைநயமிக்க'
பெரியகாவியம் தான்
தஞ்சை பெரியக்கோவில்.

மெகர்பான் இப்ராஹிம்,
கரிசவயல்

# விவசாயி

அவன் ஒரு வினோத பிறவி
அகிம்சையின் உச்சம்..
தன்னை மதியாதவனுக்கும் வரம்
(உணவு) அளிக்கும் கடவுள்..

அட்சயபாத்திரம் பற்றி நாம் அறிந்ததே
இவன் தான் அட்சய கதாபாத்திரமோ...
என் சிந்தையில் நிந்திக்கும் கேள்வி
இது...

பாத்திரம் வேண்டுவனவற்றை
வேண்டும் பொழுது தருமாம்...
கண்டதில்லை ஒருவரும்... ஆனால்
கதாபாத்திரம் என்றும் நிதர்சனம்...

பசியறிந்து உணவு அளிப்பது தாய்
அன்றோ! இவன் தாயுமானவன்..
பிறர்தன் துயர் நீக்க
இவந்தன் வயிற்றில் ஈரத்துணி..

மகவைதனை பிரசவிப்பதால் பெண்
தாய் என்றால்..
மகசூல் அதை பிரசவிக்கும் இவன்
யார்?
தாய் அவள் பாரமோ பத்து மாதம்
தாயுமானவன் பாரமோ ஆயுள் முழுதும்
அல்லவோ...

வெயில் அவன் கண்ணீர்
வேர்வையுடனும்
மழை அவன் கண்ணீர் நீருடனும்
சேர்வதால்
அவன் துயர் அதில் கரைந்து
போனதோ?
நம் பார்வை படாமல்...

விளைவித்த பொருட்களுக்கு போதிய
விலையில்லை ..
ஏன் விளைவிக்க வேண்டும்?

இயற்கை இடர்பாடுகள் இடம்
கொடுக்க
ஏன் விளைவிக்க வேண்டும்?

இடைதரகன் அவன் கொழிக்க,
கொதித்து போகமால்
ஏன் விளைவிக்க வேண்டும்?

லாபம் தரும் பலதொழில்கள் இருந்தும்
ஏன் விளைவிக்க வேண்டும்?

ஏன்? ஏன்? என்று கேள்வி கணைகள்
தொடுக்க.. பதிலாய் நிற்பது அவன்
வியர்வையும் புன்சிரிப்பு மட்டுமே

விளை நிலங்கள் இன்று விலை
நிலங்களாக மாற யார் காரணம்?
பிறர் துயர் நீக்கி தன்னலம் பாராத
அவன்
தூக்கில் தொங்க யார் காரணம்...

தனி ஒருவனுக்கு உணவு
இல்லையெனில் ஜகதினை அழிப்போம்
என்றான் நம் தமிழ் பாட்டன்...

நிதர்சனம்
இவன் இல்லையேல் நம் பாட்டனின்
வாக்கு மெய்க்கும்...நிச்சயம்
மெய்க்கும்...

கனத்த இதயத்துடன்
**விருதை சதிஷ்..**

# கவிதை துணுக்கு...

“முதியோர் இல்லம்”
சில வீடுகளில் முதுநிலையில்
ஆடிக்கொண்டு இருக்கும்
நாற்காலிகள்!
தூக்கியெறியப்படுவதில்லை.

“மனிதன்”
தெருநாயை கண்டால் கல்
எறிகிறான்!
பணக்காரன் வீட்டு நாயை கண்டு!!
பல்லை காட்டுகிறான்..

“அன்பு”
இல்லா ஒன்றை எடைப்போடுகிறோம்
யாருடையது அதிகம் என்று!!

“கோலம்”
அவள் விரல் இடையே சிந்திய
மணல் வரைந்துக்காட்டியது!
வாழ்க்கை எத்தனை சிக்கலானது.

“வாழ்க்கை”
வட்டம் ஒன்றை வரைந்துக்கொண்டு!
அதனுள்ளே விழுந்துக்கொண்டு
தவிக்கிறோம்.

“கால பயணம்”
தொடங்கிய இடத்தில் முடிந்தப்
போதுதான் தெரிந்தது அது சுழியம்
என்று!!

“போதும்”
இலை உதிராதா?

இதயத் துடிப்பை நிறுத்தி வைக்க!



மனோ
குணசேகரன்,
புள்ளவராயன்
குடிக்காடு.



குண சித்ரா

மன்னார்குடி.

# கூடுவிட்டு கூடுபாயும் கலை

அழும் குழந்தையை
அமைதிப்படுத்துவதொன்றும்
அவ்வளவு சுலபம் அல்ல...

இருந்த நிலையிலேயே
இறக்கவேண்டும் நொடியே அழுமந்த
குழந்தையாக பிறக்க வேண்டும்.

ஆறடியுள்ள உங்கள் உயரத்தை
அரையடிக்கு குறுக்க வேண்டும்.

விட்டலாச்சாரியார் படவிந்தைகள்
புரிய வேண்டும்.

கூடுவிட்டு கூடுபாயும் சித்தர்
கலைகளில் நீங்கள் கை தேர்ந்தவராக
மாற தயாராக வேண்டும்.

பலகுரல் பேசும் மேடை
கலைஞராகவும்.. ஜென் துறவியில்
பாதியும் ஜெமினி சர்க்கஸில்
மீதியுமாக மாறவேண்டும்.

இல்லாதவற்றை இருப்பதாகயெண்ணி
இருப்பவற்றை இல்லாததாக்க
வேண்டும்.

அழுதுகொண்டே சிரிக்கவும்..
சிரித்துக் கொண்டு பேசவும்..
பேசிக்கொண்டே கோபப்படவும்..
கோபித்துக்கொண்டே கொஞ்சவும்
வேண்டும்.

காதலில் மனநிலை பிறழ்ந்தவனாய்
நீங்களாகவே பேசிக் கொள்ள
வேண்டும்.

உலகிலில்லா மழலை மொழிக்கு
உள்பொருள் புரிந்து கொள்ள
வேண்டும்.

காற்றைப் போல கண்ணுக்குத்
தெரியாத ஒரு கருப்பொருள்
உள்ளுக்குள் உருள வேண்டும்.

ஈனக்குரலின் ஸ்வரம் பிரிக்க
அறிந்திருக்க வேண்டும்.

ங்கே எனும் குறில் நெடில்களில்
அளபெடைகளை அளக்க
அறிந்திருக்க வேண்டும்.

அழுமந்த குழந்தையின் அழுகையை
நிறுத்த

இவ்வளவு சோதனைகளைத்
தாண்டியும் நீங்கள் சாதனை
புரிந்திருக்கவும் வாய்ப்பிருக்கிறது.

சரிதான் போங்க என சவாலில்
தோற்று சரிந்து போகவும் வாய்ப்பு
இருக்கிறது.

சவாலுக்கு தலையை பக்கவாட்டில்
அசைத்து பயணிப்பவரா நீங்கள்???

இல்லை தலையை முன்பின்
அசைத்து என்னோடு
முன்மொழிபவரா நீங்கள்??

நீங்கள் யார்???

# அதே மழையில்

கண்ணாடி சாளரத்தில் கைகளை
நனைத்து நாம் சிரித்திருக்கும் அதே
அடைமழையில்
தொப்பலாக நனைந்து
அழுதிருந்தனர் தெருவாசிகள்

# கடவுளின் கவலை

அநீதி இழைப்பவன் அருகில்
இருந்தும் ஆயுதங்கள்
கையிலிருந்தும் சிலையாகவே
நிற்கிறேன்
சிறப்புதரிசனத்தில்

# பாலாபிஷேகம் பயனில்லை

கோவிலின் உள்ளே பாலபிஷேகம்
செய்தும் பயனில்லை
பணக்காரருக்கு.. பசியோடு
வெளியே அழுகிறது பச்சிளம்
குழந்தை...

நேசமுடன் ஈ.சு
நன்றி





நிரஞ்சனா கபிலன்,

*375, தெற்கு தெரு,*
*மாங்கோட்டை நத்தம்,*
*வல்லூர்,*
*மன்னார்குடி.*

# தைத்திருநாள்

என்று தீருமோ பசியின் மோகம்
இனியும் தீருமா தண்ணீரின் தாகம்
மயங்கி எழுவோம்
இனியும் வேண்டாம்
ஏழ்மையின் பாவம்..
எழுந்து நில் மனிதா
எல்லாம் உன் தேசம்
தை பிறந்தால் வழி பிறக்கும்
தரணியெல்லாம் இனி செழிக்கும்
தளராதே மனமே..
புதுமை கொண்ட வாழ்க்கையினை
கொண்டாடும் நேரமிது
விடியட்டும் புது ஞாயிறு...
புதிர் கொண்டு பொங்கி எடுத்த
பொங்கல் இது
பாரினில் தழைத்திடும்
தை திங்கள் இது
செங்கரும்பின் தீஞ்சுவை சாறுனில்
புதியதொரு தேசம் செய்வோம்
காளைகளை கழனி கொண்டு
காணும் இடமெல்லாம்
மகிழ்ச்சி பொங்கும்
தைப்பொங்கல் நன்னாளில்
வாழ்த்து கூறி மகிழ்ந்திடுவோம்.

அட்டைப்பட
ஓவியம்:



இரா.மதுவர்ஷினி,
சரஸ்வதி வித்யாலயா பள்ளி,
பெருவிடைமருதூர்.

வாழ்த்துக்களுடன்
வடுவூர். ஜெ.நீதிவளவன்

# அறிவு.... !!!!

அகங்காரம் கொண்டு
ஆடம்பரமாய் திரிந்து
இயலாமை பேசி
ஈகையற்று இருப்பவனையும்
அலங்காரம் செய்வதே
அறிவு...!!!!!!

# வீரம்... !!!

குருதி பூமித்தாயின்
பாதம் பட...!!!
சிரம் தனிந்து
சிரமப்பட...!!!
எதிரியின் அம்பு
இதயத்தை தொலைத்தும்
தொலையாது
என் வீரம்...!!!!!!

# முயற்சி.... !!!!

தத்தி தவழும் வயதிலும்
துள்ளிக் குதிக்க வைப்பது...!!!!!
தட்டுத் தடுமாறும்
நிலையிலும்
தன்னம்பிக்கை
நடைபோட வைப்பது
அதுவே முயற்சி....!!!!!

# மனதின் ஓசை... !!!

வாகனத்தில்
நாற்பதை தாண்டும்
போதெல்லாம் - ஓர் சத்தம்
வண்டியில் அல்ல
மனத்தினில் என்
எதிர் காலத்தின் ஓசை...!!!!

# நலமா... !!!!

மனம் முழுக்க
ஏமாற்றம்...!!!!
உடல் முழுக்க
சோர்வு...!!!!!
எனினும் முகத்தில்
மட்டும் ஏனோ சிரிப்பு... !!!
நீ கேட்கும் நலமா என்ற
வார்த்தையில்...!!!!

# அழகு... !!!!

கண்களுக்கு தெரிவதில்லை
கருப்பும் சிவப்பும்
வேறென்று...!!!
ஏனெனில்
அதன் ரசனை
அழகில் மட்டுமே...!!!
நிறத்தில் அல்ல...!!!

ச.அருள் பிரசாத்,
B.Com., CMA MDA DTL
(GST Practitioner)
சிராங்குடி.



# என்னோடு நான் இருப்பேன்...

/
நீர் எதுவாயினும்
தாகத்தைத் தீர்த்துக் கொள்ளும்
மண் விழுங்கிய விதை.

/
பூக்கள் வண்டுகளுக்கு
விட்ட தூதில்; வனமெங்கிலும்
தேன் கூடுகள்.

/
உன்னதமான வாசனை
திரவியங்களிலும்
அபூர்வமான பூக்களிடமும்
இல்லாத பிரத்யேக நறுமணம்
என்னவளின் திருமேனியில்...!

/
இயற்கையின் நியதியில்
இதுவரை நிகழாதவொன்றாய்
குதித்த வேகத்தில்
துள்ளி எழுகிறது அருவி.
என்னவளின்
பேரெழில் கண்ட மகிழ்ச்சியில்.

/
விழிவழியே நுழைந்து
இதயத்தின் ரணம் ஆற்றும்
இன்ப மருந்து காதல்.

/
நிராயுதபாணியாக
நிற்கும் போதும்; அவளின்
விழிக்கணைகள்
தாக்கத் துரத்துகிறது; என்னை.

/
என்னைக் கொஞ்சி முடித்த
கையோடு
பிள்ளையைக் கொஞ்சுகிறாள்
மனைவி.
கொஞ்சமும் குறையவில்லை
அவளின் தாய்ப்பாசம்.

/
பிறக்கக் கருவறையைத்
தருகிறாள் பெண்.
இறக்கக் கல்லறையைத்
தருகிறது மண்.

/
வரவேற்பு வாயிலில்
எல்லோரையும்
சந்தனம் கொடுத்து
பன்னீரைத் தெளித்து
வரவேற்கும் பேரழகி
என்னொருத்தனுக்கு மட்டும்
அன்பைக் கொடுத்து
காதலைத் தெளித்து
வரவேற்கிறாள்.

/
இரைதேடும் எறும்புகள்
அருவியில் குளித்தன
விரலிடுக்கில் கசிந்த நீரில்.

/
இது என்னோடு
நான் பேசும் நேரம்
ஓ... பிரபஞ்சமே சற்று

அமைதியாய் இரு.

/
என்னை விட்டு
யார் பிரிந்து போனாலும்
கடைசிவரை; என்னோடு
நான் இருப்பேன்.

/
பறித்த பூ
கையிலிருந்து பறக்கிறது.
பட்டாம்பூச்சி...!



— பாரியன்பன் நாகராஜன்
82/32-B, பிள்ளையார் கோயில் தெரு,
காமாட்சியம்மன் பேட்டை
குடியாத்தம் - 632602
வேலூர் மாவட்டம்
கைப்பேசி: 9443139353.

---

# நிழல்களுடன் ஒப்பந்தம்

நிழல்களின் ஒப்பந்தக்களுக்கெல்லாம்
நீ சாய்ந்து கொண்டால்
நீதியின்றி நிற்கதியாவாய்!

-----

இலக்கை மண்ணாக்கி
முயற்சியை உரமிட்டால்
வெற்றியின் விதைகள்
விண்ணளவு விழுதாகும்!

கு.மோனிஷா,
எம்.ஏ.இரண்டாம் ஆண்டு ஆங்கில இலக்கியம்,
நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி.
ஈரோடு.

# நேசித்த

ஒவ்வொன்றும்
தொலைந்து கொண்டே இருக்கின்றன...
இனி எவற்றையும் நேசிக்கக்கூடாதென
புதிதாய்
தொடங்குகிறேன் ஒரு விடியலை,
வந்தமர்கிறது என் கைகளில்,
என்றோ ஒரு நாள்
தொலைத்த பறவையொன்று!
**

வயதான பிறகு
வீட்டை விட்டு வெளியேற்றிவனிடம்
ஏமாந்து போயிருந்தது...
நாய்,
நன்றியை எதிர்பார்த்து!
**

நாற்பது வயதை கடந்த பிறகும்
குழந்தையாய் இருப்பவனை
மனநல மருத்துவனை ஒன்றில் கடந்து
கொண்டிருக்கிறேன்...
சிரிப்பிலும் அழுகையிலும் அவன்
சொல்ல வந்ததை மொழி பெயர்த்துக்
கொண்டிருக்கிறது...
அருகில் நின்று கொண்டிருந்த குழந்தை!
**

குழந்தையின்
பசி தீர்க்க வைத்திருந்த
கடைசி பிஸ்கெட்டை
வாசலின் முன்பு ஒட்டிப்போன
வயிற்றோடு
முனங்கிக் கொண்டிருந்த
நாய்க்குட்டிக்கு வீசி விட்டு
திரும்பிக் கொண்டிருக்கையில்
புன்னகைத்துக் கொண்டிருக்கிறது...
நீண்ட நேரமாய் அழுதுகொண்டிருந்த
குழந்தை!
**

பஞ்ச பூதங்கள்
காக்கின்றன
இலஞ்ச பூதங்கள் அழிக்கின்றன...
இந்த தேசத்தை!
**

மழைநாளில்
குழந்தைகளிடத்தில்
அடைக்கலமான குருவி,
வீடு கூடானது!
**

சந்தையில்
விற்பனைக்கு வந்த
ஆட்டுக்குட்டிகளில்
விற்காமல் வீடு திரும்பக் காத்திருக்கும்
கால் ஒடிந்த குட்டிகளை வாங்கிச்
செல்கிறாள்...
ஒவ்வொரு முறையும்
மாற்றுத்திறனாளிப் பெண் !
**

குழந்தையின் பசி தீர்க்க
கடவுள் வேடமிட்டவனை
கண்டும் காணாமல்
கடந்து கொண்டிருக்கிறார்கள்...
மனித வேடமிட்டவர்கள்!

மு.முபாரக்



# என் வாழ்க்கை முன் போல் இல்லை



G.S. விஜயவர்மன்

நம் சமுதாயத்தில் எழுதப்படாத விதி ஒன்று உண்டு; இங்கு வெற்றி பெறுபவர்கள் மட்டுமே கொண்டாடப்படுவர். எவ்வளவு கடினமாக முயன்று தோல்வியுற்றாலும், தோற்பவர்களுக்கு வரலாற்றில் இடமிருப்பதில்லை.

எந்தவொரு திரைப்படமும், புத்தகமும் தோல்வியை முடிவாக கொண்டிருந்தால், அவற்றை நாம் கொண்டாடுவதில்லை. எத்தனையோ திரைப்படங்களில் வில்லனாக நடிக்கும் கதாபாத்திரத்தை, கதாநாயகன் கொன்று வீழ்த்துவது போல் காட்சிகள் அமைந்திருக்கும். ஆனால், கதாநாயகர்கள் வீழ்வது போன்ற காட்சிகள் அமைவது மிகச் சொற்பமே!

திரைப்படங்களிலும், கதைகளிலும் கதாநாயகர்கள் வெற்றி பெறுவதாகவே முடிவுகள் இருந்தாலும், நிதர்சனத்தில் இங்கு தோல்விகள் ஏராளம். தோல்விகளை ஏற்று கொண்டு அடுத்த நிலைக்கு முன்னேறுவதும், தோல்விகளை கடந்து களத்தில் சோர்வடையாமல் நிற்பதும் மிகப் பெரிய வெற்றி என்பதை ஏனோ நாம் மற்றவர்களுக்கு சொல்லி கொடுப்பதற்கு தவறிவிட்டோம்.

என் வாழ்வில் நான் அவ்வாறு சந்தித்த வெற்றியாளரை (சமுதாயத்தின் பார்வையில் ஒரு தோல்வியாளரை) பற்றியும், அவரை சந்தித்த பின்பு என் வாழ்வில் ஏற்பட்ட மாறுதல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விளைகிறேன்.
இளநிலை, முதுநிலை படிப்புகளை முடித்துவிட்டு, சராசரி இளைஞர்களை போல் ஒரு அமெரிக்க நிறுவனத்தில் வேலை பார்த்து கொண்டு, கடிவாளம் போட்ட குதிரை என வாழ்க்கை நகர்ந்து கொண்டிருந்த தருணம். கல்வி, வேலை, திருமணம் என பொதுவான வாழ்க்கை பயணத்தை அனுபவிக்க எனக்கு கொடுத்து வைக்கவில்லை போலும்.

பணியில் அமர்ந்த ஓராண்டிற்குள் தந்தையின் உடல் நலம் சரியில்லாமல் போகவே, வேலையை விட்டுவிட்டு சென்னையிலிருந்து சொந்த ஊர் திரும்ப வேண்டிய சூழ்நிலை. 6 மாதங்கள் தொடர்ச்சியாக மருத்துவமனை – வீடு – மருத்துவமனை என அலைந்து கொண்டிருக்க, தந்தையின் உடல் நலம் தேர்ச்சி பெறவே, வேலை தேடி மீண்டும் சென்னை வர வேண்டிய நிலை.

திடீரென்று ஒரு நாள் மாலை, நண்பர் ஒருவரிடமிருந்து அழைப்பு வருகிறது; நம் குழுவில் ஒரு செய்தி பகிரப்பட்டிருக்கின்றது, அதனை படித்தாயா? என கேட்கிறார்.

நண்பரை காத்திருக்க சொல்லிவிட்டு, நான் தன்னார்வலராக பணியாற்றி வரும் அந்த அமைப்பின் குழுவில் பகிரப்பட்ட செய்தியை படிக்கின்றேன்.

படித்து முடித்ததும், மற்ற தகவல்கள் குறித்து நண்பரிடம் வினவுகிறேன்; 'சரி சகோ, அந்த செய்திக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? தாங்கள் என்னிடம் அழைத்து கேட்பதற்கு நோக்கம் என்ன?' நண்பரின் பதில் சிறு திகைப்பை அளிக்கின்றது; 'இல்லை விஜய், நீங்கள் தான் இந்த பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்; உங்களால் மட்டுமே இந்த உதவியை செய்ய இயலும், மறுத்துவிடாதீர்கள்' என்கிறார். யோசித்து பதில் அளிப்பதாக கூறி இணைப்பைத் துண்டிக்கிறேன்.

ஏன் அந்த பொறுப்பை ஏற்று கொண்டேன் என இன்று வரை எனக்கு பதில் கிடைக்கவில்லை; ஆனால், அந்த ஒற்றை முறை 'சரி' எனக் கூறியது வாழ்க்கையின் மீது நான் கொண்ட பார்வையை, வெற்றி என்பதற்கு நான் கொண்ட அர்த்தத்தை முற்றிலும் மாற்றியது!

எனது ஊருக்கு அருகில் 10 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் சிறு கிராமம்; அந்த கிராமத்தை விட்டு அதிகம் வெளிவந்திடாத ஒரு பெற்றோர்! ஏதேனும் கூலி வேலைக்காக ஆட்களை எங்கள் நகரத்திற்கு அழைத்து வரும் போது, அந்த கிராமத்தின் வழியே கடந்து செல்லும் ஒரு மஞ்சள் நிற சிறிய பேருந்தில் (Mini Bus) வருடத்திற்கு ஒரு சில முறை மட்டும் அந்த குடும்பத்தின் தலைவர் தன் கிராமத்தை விட்டு வெளியே வருவதுண்டு.

ஆம், ஒவ்வொரு கோடை விடுமுறைக்கும் ஒவ்வொரு நாடாக வலம் வரும் பணக்காரர்களுக்கு மத்தியில், தன் கிராமத்தை விட்டு 10 கிலோ மீட்டர் தொலைவிற்கு மேல் பயணிக்காத சில மனிதர்களை கண்டவுடன் எனக்கும் சற்று வியப்பு தான். வறுமை வாட்டி வதைக்க, உல்லாச பயணங்கள் செல்வதற்கெல்லாம் வாய்ப்புகள் ஏது?

அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி மற்றும் 3 மகன்கள் என சற்று பெரிய குடும்பம்; தாத்தா, பாட்டி இருவருக்கும் வயதாகிவிடவே, மொத்த குடும்பச் சுமையும் தந்தையின் தலை மேல். முதல் 2 மகன்களும் உடல் மற்றும் மன வளர்ச்சி குன்றியவர்கள் (சுருக்கமாக கூற வேண்டுமெனில் 20 வயதை கடந்த குழந்தைகள்). மூன்றாவது மகனுக்கு உடல் வளர்ச்சி இல்லையெனினும், கல்லூரி செல்லும் அளவிற்கு மன வளர்ச்சி பெற்றிருந்தது வாழ்க்கையின் மீது அவர்களுக்கு சிறு நம்பிக்கையை அளித்தது.

கூலி வேலைக்குச் செல்லும் நேரம் போக, மாலை மற்றும் இரவு நேரங்களில் வீட்டிற்கு அருகே தான் வைத்திருந்த பட்டறையில் மண்வெட்டி, அரிவாள் போன்ற சாதனங்கள் செய்யும் வழக்கத்தை கொண்டிருந்தார் அந்த பெரியவர். 2018 ஆம் ஆண்டு வீசிய கஜா புயலின் தாக்கத்தால் தனது பட்டறை சேதமடைந்து விடவே, காய்ச்சி போன தன்

கைகளின் இரும்புத் தன்மையை போன்று, இதயத்தையும் வலுவாக்கிக் கொண்டு உழைத்து கொண்டிருந்தவருக்கு ஓர் பேரிடி!

கல்லூரி சென்று கொண்டிருந்த தனது மூன்றாவது மகனுக்கு பார்வை மங்கலாக தெரிய, அரசு மருத்துவமனைக்கு சென்று பரிசோதனை செய்கின்றனர். அந்த கல்லூரி மாணவனின் மூளையில் சிறு கட்டி ஒன்று உருவாகி, நாட்கள் நீள, நீள சற்று பெரிதாகி, இரு கண்களுக்கும் செல்லும் நரம்புகளை பாதித்துவிடுகின்றது; பார்வை கிடைப்பது கடினம், உயிரை காப்பாற்றி கொள்ள விரும்பினால் உடனே சென்னை அழைத்து செல்ல வேண்டும் என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

இரண்டு மகன்களின் எதிர்காலம் கேள்வி குறியாகி போனதை விட, தங்களின் நம்பிக்கை ஒளியிழந்து இருளை நோக்கி செல்வதை அந்த பெற்றோர்களால் பொறுத்து கொள்ள முடியவில்லை. யாரிடமாவது உதவி கோர வேண்டும்; ஆனால் யாரிடம் கேட்பது? தங்கள் கிராமத்தை விட்டு வெளியே செல்லாத ஒருவர், சென்னை சென்று மருத்துவ உதவிகளை பெற வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, தங்கள் குடும்பத்தில் எழுத, படிக்க தெரிந்த ஒரே நபர், தற்பொழுது கண்பார்வையையும் இழந்திருக்கிறார்கள்.

அந்த ஊரின் தபால் அலுவலகத்தில் பணியாற்றிய எனது நண்பருக்கு செய்தி கிடைக்கவே, நாங்கள் பயணிக்கும் ஓர் தன்னார்வ குழுவிடம் இதனை எடுத்து கூறுகிறார். முன் பின் அறிமுகமில்லாத ஒருவரின் மருத்துவத்திற்காக சென்னை செல்ல வேண்டும் என்பதை விட, காலை முதல் இரவு வரை அவர்களுடன் மருத்துவமனையிலேயே தங்க வேண்டும் என்ற சிந்தனை பல தன்னார்வலர்களை சிந்திக்க வைத்தது.

மருத்துவமனையின் வாடையே சிலருக்கு ஒவ்வாத பொழுது, சென்னையில் உள்ள ஒரு அரசு மருத்துவமனையில் அறிமுகமாகாத ஒருவருடன் தங்க வேண்டும் என்ற விண்ணப்பம் பலருக்கும் தயக்கத்தை அளிக்க, சிலருக்கு பணிச் சுமை தடங்கலாக அமைய, வேலை தேடிக் கொண்டிருக்கும் நான் கடந்த 6 மாதங்களாக தந்தையின் மருத்துவத்திற்காக மருத்துவமனையில் தங்கி பழகிய காரணத்தால், 2 வாரங்கள் அவர்களுக்கு துணையாக சென்னை செல்ல வேண்டிய கட்டாயம் என்னிடத்தில் வந்து சேர்ந்தது.

பெற்றோரின் அரவணைப்பில், வாழ்வின் துன்பங்களை நுகராத ஓர் சராசரி இளைஞனான எனக்கு இது ஒரு புதிய கோரிக்கை; வேறு யாராலும் நேரம் ஒதுக்க முடியாமல் போகவே, செல்வதாக ஒப்புதல் அளிக்கின்றேன். முதன் முறையாக, அந்த பெற்றோர் இருவரையும், அந்த மாணவனையும் தொடர் வண்டி நிலையத்தில் சந்திக்கின்றேன்.

மறு நாள் சென்னை சென்றடைந்து, அந்த அரசு மருத்துவமனையில் பணியாற்றும் ஒரு மருத்துவரின் எண்ணுக்கு அழைக்கின்றேன்; அவரின் உதவியுடன் உள்நோயாளியாக அந்த மாணவனை அனுமதிக்கின்றோம்; பெற்றோர் மட்டுமே தங்கிக் கொள்ள அனுமதி அளிக்கப்படவே, இரவு 8 மணி வரை உடன் இருந்துவிட்டு வடபழனி அருகே இருக்கும் நண்பரின் அறைக்கு செல்கிறேன்.

காலை 5.30 மணிக்கு எழுந்து குளித்து விட்டு, தயாராகி 7.30 மணிக்குள் மருத்துவமனை செல்கிறேன்; முழு நாளும் அந்தச் சிறுவவனின் அருகில் இருந்து மருத்துவர்களிடம் உரையாடுவதும், ஸ்கேன் செய்வதற்கு அழைத்து செல்வதும், மருந்துகளை வாங்குவதுமென 20 நாட்கள் ஓடிவிடுகின்றன.

தீவிர அறுவை சிகிச்சை முடிந்து, தலையில் இருந்த கட்டி அகற்றப்பட ICU வார்டிற்கு அந்தச் சிறுவனை மாற்றுகின்றனர்; என் தந்தைக்கு மீண்டும் உடல் நிலை சரியில்லாமல் போக மருத்துவமனையில் உள்ளதாக ஊரிலிருந்து அழைப்பு வருகிறது! மாற்றாக நண்பர் ஒருவரை ஏற்பாடு செய்து விட்டு வீடு செல்கிறேன்.

ஒரு வாரத்தில் அந்த சிறுவனுக்கு டிஸ்சார்ஜ் செய்ய அனுமதி அளிக்கப்படுகின்றது; தந்தையின் மருத்துவத்திற்காக நானும் சென்னையில் தங்கியிருக்கவே, நேரில் சென்று டிஸ்சார்ஜ் செய்து, காரில் அழைத்து சென்று கோயம்பேட்டில் பேருந்து ஒன்றில் ஏற்றிவிட்டு, நடத்துனரிடம் சொல்லி அனுப்பி வைக்கின்றேன்.

தந்தையும் நலம் பெற வீடு திரும்பிய ஒரு சில நாட்களில், அந்தச் சிறுவனை தஞ்சை அரசு மருத்துவமனையில் அனுமதித்திருப்பதாக செய்தி வருகின்றது; பார்க்க செல்கிறேன். உடல் நிலை மோசமடைந்து என் கண்களுக்கு நேராக அச்சிறுவனின் உயிர் மெல்ல மெல்ல அவன் உடலை விட்டு வெளியேறுகிறது; கண்களில் நீர் கசிய அந்த இடத்தை விட்டு வெளியேறிய ஒரு சில நிமிடங்களில் இரங்கல் செய்தி வந்தடைகின்றது.

தன்னார்வல அமைப்பு சார்பாக அனைவரும் முன் நின்று இறுதி சடங்கினை முடித்து வைக்கின்றோம்; அந்தப் பெரியவர் ஒரு சிறு உதவி வேண்டுகிறார்; சேதமடைந்த தன் இரும்பு பட்டறையை சீர் செய்து கொடுத்தால் தன் வாழ்வாதாரத்தை சரி செய்து கொள்வேன் என்ற கோரிக்கையை முன் வைக்கவே, அமைப்பு சார்பாக அதனை நிறைவேற்றினோம்.

இன்றும் அந்த கிராமத்தின் வழியே செல்லும் பொழுது, புதிய பட்டறையில் அந்த பெரியவர் இரும்படிக்கும் ஓசை கேட்கும்; தங்கள் எதிர்காலமாக வாழ்ந்த மூன்றாவது மகன் மறைந்து போக, மற்ற இரு மகன்களையும் பார்த்து கொள்வதற்காக இன்னும் அந்த இரும்படி ஓசை அங்கே கேட்கின்றது!

வசதி படைத்தவர்கள் கூட, மன வளர்ச்சி குன்றியவர்களை சுமையாக நினைத்து கருணைக் கொலை செய்யும் காலத்தில், எனது வயிற்று பிழைப்புக்காக உழைக்கும் பணத்தில் அந்த

இரு ஜீவன்களை நான் இருக்கும் வரை காப்பாற்றுவேன் என உழைக்கும் அந்த பெரியவர் எனக்கு ஓர் கதாநாயகனே!!

இங்கு யாவருடைய பெயரையும், ஊர்களின் பெயரையும் பெரும்பாலும் பயன்படுத்தவில்லை. ஏனெனில், எல்லோருக்கு அருகிலும் ஒருவர் இது போன்று உண்மை கதாநாயகர்களாக வாழ்ந்து கொண்டிருக்கலாம். உங்களால் உதவ முடியவில்லை எனினும், உடை, தோற்றம் வசதியை வைத்து யாரையும் குறைவாக மதிப்பிட்டு விடாதீர்கள்.

அவர்கள் போராடிக் கொண்டிருக்கும் வாழ்க்கையில் நம்மால் ஒரு நாள் கூட வாழ முடியாமல் போகலாம்!

— G.S.விஜயவர்மன்

## பிரபுசங்கர். க

எல்லாம் சரியாக
தானிருந்தது

வேளைக்கு உணவு
கனிவான கணவன்

அவ்வப்போது உருட்டி
மிரட்டினாலும்
நன்றாகவே கவனித்து
கொண்ட மாமியார்

இவ்வளவு இருந்தும்
ஏழுவகை சோறு
கைநிறைய வளையல்

அழகான சடைப்பூ சகிதம்
வளைகாப்பு முடிந்து

தாய் வீட்டிற்கு அழைத்து
வரப்பட்ட நாளில்

தாயின் மகிழ்ச்சி
அசைவுகளை

முதல்முறையாக
உணர தொடங்கியது

வயிற்றிலிருக்கும்
சிசு......

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
www.thiravukol.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில்).

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு.

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்.

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது.

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு.

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்.

சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்

பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்.

நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி.

குழாய் பதிக்கும் பணி.

விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு.

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு.

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

http://thiravukol.in

MannaiyinMaintharkal

Thiravukolnews